செ.வெ.எண்: 43 நாள்: 22.07.2016

**தமிழகஅரசு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு இதுவரை புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் ஒத்த தொழில் குழுக்களுக்கு ரூ.1.43 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் ஒத்த தொழில் குழுக்களுக்கு நிதி வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.07.2016) நடைபெற்றது.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 43 ஒத்த தொழில் குழுக்களுக்கு நிதியுதவி தொகைக்கான காசோலைகளை வழங்கி கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் வறுமையை குறைக்க வேண்டும், வாழ்வதாரங்களை பெருக்க வேண்டும், குறிப்பாக பெண்களை அதிகாரப்படுத்த வேண்டும், விளிம்பு நிலையில் உள்ளவராக கருதப்படும் ஆதரவற்றோர்கள், மாற்றுத்திறனாளிகள்,நாடோடிப் பழங்குடியினர், நலிவுற்றோர்கள் என்று கருதப்படும் இளம் விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் வாழ்வில் துயர் துடைக்கவேண்டும், இவர்களை அதிகாரப்படுத்துபவராக மாற்ற வேண்டும் என்ற நோக்கில் உலக வங்கியின் கடனுதவியோடு **"புதுவாழ்வு திட்டம்"**- என்ற திட்டத்தினை செயல்படுத்தி வருகிறார்கள்.

இதன்படி நமது மாவட்டத்தில் அன்னவாசல், கந்தர்வக்கோட்டை, கறம்பக்குடி மற்றும் குன்றாண்டார்கோயில் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 155 ஊராட்சிகளில் கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அமைப்பிலான கூட்டமைப்புகள், ஒத்த தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டு, இந்த மக்கள் அமைப்புகள் மூலம் ஊராட்சிகளில் கண்டறியப்பட்ட ஏழை இலக்கு மக்களின் வறுமையைக் குறைக்கவும், வாழ்வாதாரங்களை உயர்த்திடவும் அவ்வப்பொழுது நிதியினை விடுவித்து சுய உதவிக்குழுக்களை உருவாக்குதல், பயிற்சி அளித்தல், தொழிற் குழுக்களாக உருவாக்குதல், வங்கிக்கடன் இணைப்புகள் ஏற்படுத்தித் தருதல் போன்ற செயல்பாடுகள் மூலம் அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது.



மேலும் தமிழகஅரசு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கடந்த 5 ஆண்டுகளில் புதுவாழ்வு திட்டத்தின் கீழ் செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் ஒத்த தொழில் குழுக்களுக்கு ரூ.37.39 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளது. அதனடிப்படையில் 152 ஊராட்சிகளை சேர்ந்த ஒத்த தொழில் குழுக்களுக்கு கடந்த 5 ஆண்டுகளில் ரூ.1.43 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளது. அதில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் ஊராட்சிகளில் உள்ள 43 ஒத்த தொழில் குழுக்களுக்கு ரூ.54,17,025 மதிப்பில் நிதியுதவி தொகைக்கான காசோலைகள் இன்று வழங்கப்பட்டது. இந்த நிதியினை பெறும் மகளிர் சுயஉதவிக்குழுவினர் இதனை முறையாக பயன்படுத்தி சுயதொழில் செய்து வருமானத்தை பெருக்கி வறுமையை போக்குவதுடன் தங்களது வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார், புதுவாழ்வுத்திட்ட மாவட்ட திட்ட மேலாளர் திருமதி.எஸ்.வசுமதி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**